பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 03 செவ்வாய்க்கிழமை 19.07.2022 கதிர் 145

## மேலும் ஏழு இலங்கையர்கள் தமிழகத்தில் இன்று தஞ்சம்!

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 7 பேர் இன்று காலை தனுஷ்கோடி சென்றடைந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக இங்குள்ள மக்கள் உணவுப் பொருள்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர். இதனால் இவ்வருடம் மார்ச் 2

### தோல்விப் பயம் காரணமாகப் பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டு

# ஜனாதிபதித் தேர்தலிலிருந்து திடீரெனப் பின்வாங்கிய சஜித்



### ரணில், டலஸ், அநுர போட்டி மூவரும் இன்று வேட்புமனு







இலங்கை நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதித் தேர்தல் சர்வதேச ரீதியில் சூடுபிடித்துள்ள நிலையில், போட்டிக் களத்திலிருந்து எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ திடீரென விலகியுள்ளார்.

தமது கட்சி டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் டலஸ் பெற்றி பெற்றால், சஜித் பிரதமர் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதித் தேர்தலில் தோல்விப் பயம் காரணமாகப் பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டே சஜித் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று சமூகவலைத்தளங்களில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 2

## சஜித்தின் தீர்மானம் நாட்டுக்கான தியாகம்

### இப்படிக் கூறுகின்றார் ரஞ்சித்



ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் இருந்து சஜித் பிரேமதாஸ பின்வாங்கியமை, பெரும் தியாகம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொது இணக்கப்பாட்டுடன் சர்வகட்சி அரசு அமைய வேண்டும் என்பதே 2



## சிறுபான்மையினரை ஒதுக்கி தேசியக் கொடியை சிங்களக் கொடியாக மாற்றியவரே அழகப்பெரும



நாளை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக போட்டியிடும் டலஸ் அழகப்பெரும, நாட்டின் தேசியக் கொடியில் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் குறிக்கும் ஒரேஞ்ச் மற்றும் பச்சை கோடுகளை அகற்றிவிட்டு, சட்டவிரோதமாக, முறையற்ற விதத்தில் தயாரிக்கப்பட்ட தேசியக் கொடியை 'சிங்களக் கொடி'யாக 2

## டலஸ் ஜனாதிபதியாக வந்தால் சஜித்தைப் பிரதமராக்குவோம்

### 'மொட்டு'வின் தவிசாளர் பீரிஸ் உறுதி

கொழும்பு, ஜூலை 19

புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் டலஸ் அழகப்பெரும வெற்றி பெற்றால், சஜித் பிரேமதாஸ பிரதமராக நியமிக்கப்படுவார். இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி முழு ஆதரவையும் வழங்கும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து இன்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'மொட்டு'க் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் டலஸுக்கே ஆதரவு வழங்குவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.



## மைத்திரி அணி யாருக்கு ஆதரவு?

### இன்று மாலை முக்கிய முடிவு ரணிலுக்குச் சாமர நேசக்கரம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய குழுக் கூட்டத்தை இன்று கூட்டுவதற்குக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கும் எனத் 2

## ராஜபக்ஷக்களை ஒட்டுமொத்தமாக விரட்டியடித்த ரணிலுக்கே வெற்றி!

### அடித்துக் கூறுகின்றார் மனோ

ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவே ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தார் என்று கூறினால் அது முட்டாள்தனமான எண்ணப்பாடாகும் என்று தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ராஜபக்ஷக்களை ஒட்டுமொத்தமாக விரட்டியடிப்பதற்காகவே அவர் வருகை தந்தார் என்பதே எனது எண்ணப்பாடாகும் என்றும் கூறினார். 2



## ரணிலின் எம்.பி. பதவிக்கு எதிரான மனு நிராகரிப்பு!

பதில் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த 2

## இலங்கை அகதி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை

### மண்டபம் முகாமில் நேற்று

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து விமானம் மூலம் இந்தியா சென்றவர் மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தூக்கிட்டுத் தற்கொலை புரிந்துள்ளார். 2

## ராஜபக்ஷக்களை ஒட்டுமொத்தமாக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, நாளை நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார் என்றும், அதற்கான சாதகநிலைதற்போது காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைவரம் மற்றும் புதிய ஜனாதிபதிக்கான தேர்தல் ஆகியவை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் நீண்டகால அரசியல் தொடர்பில் இருந்து வருகின்றேன். அவரைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருக்கின்றேன். அந்தவகையில் ரணில் விக்கிரமசிங்க தனி ஒருவராக நாடாளுமன்றம் வரவில்லை. ஏதோ ஒன்று சாதித்துக் காட்ட வேண்டும் அல்லது தன்னுடைய கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே தவிர அவர் வெறுமனே நாடளுமன்றத்துக்கு வரவில்லை.

தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதற்காகவே வருகை தந்தார் என்று கூறினால் அது முட்டாள்தனமான எண்ணப்பாடாகக் கருதுகின்றேன். மாறாக அவர் வருகை தந்தமையானது ராஜபக்ஷக்களை விரட்டியடிப்பதற்கே ஆகும். பஸில் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய மூன்று ராஜபக்ஷக்களையும் அவர் தற்போது விரட்டியடித்து விட்டு பதில் ஜனாதிபதியாக அமர்ந்திருக்கின்றார்.

இன்று வரை பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க நாளை இடைக்கால ஜனாதிபதியாகவும் வெற்றி

## ரணிலின் எம்.பி. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக 2021ஆம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்.

இவர் எம்.பியாகப் பதவியேற்றமை தேர்தல்கள் சட்டத்துக்கு விரோதமானது என்றும், இதனால் இவர் அந்தப் பதவிக்குத் தகுதியற்றவர் என்றும் அறிவிக்குமாறு கோரி வினிவித பெரமுனவின் பொதுச் செயலாளர் நாகானந்த கொடிதுவக்கு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தமனுஇன்றுஆராயப்பட்டபோது, மனுதாரர் முன்வைத்துள்ள சில விடயங்கள் தவறானது என்று சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி இந்த மனுவைத் தொடர்வதற்கு அனுமதி வழங்க மறுத்த நீதிமன்றம் மனுவை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

## இலங்கை அகதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திரசேகரம் சம்பந்தன் எனும் 25 வயதுடைய கருணை இல்ல வீதி, மூன்றாம் ஒழுங்கை, புளியங்குளம், வவுனியா எனும் முகவரியுடைய இளைஞரே தற்கொலை புரிந்துள்ளார்.

இலங்கையில் இருந்து கடந்த 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி கொழும்பில் இருந்து விமானம் மூலம் அவர் சென்னை சென்றிருந்தார். பின்னர் ஒசூர் பகுதியில் தொழில் புரிந்து விட்டு இவ்வருடம் ஜனவரி மாதம் 6ஆம் திகதி இராமேஸ்வரம் - தனுஷ்கோடி சென்றவேளை மரைன் பொலிஸார் விசாரணை செய்து பின்னர் மண்டபம் தனித்துணை ஆட்சியர் மூலம் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தார். அவர் வெளியில் கட்டட வேலைக்கும் சென்று வந்துள்ளார்.

இருந்தபோதும் நேற்று அவர் தங்கியிருந்த இடத்தில் தற்கொலை புரிந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றபோதும் அதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

பெற வாய்ப்பு உண்டு.

நாளை நடைபெறவிருக்கின்ற இடைக்கால ஜனாதிபதித் தேர்தலின் போது அவருக்கு அதிக வாய்ப்பு காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பது உறுதியாகி இருக்கின்றது. அதற்கான பிரகாசமான வெளிப்பாடு தென்படுகின்றது.

நாளை நடைபெறவிருக்கின்ற தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஐந்து உறுப்பினர்களும் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இன்றிரவுக்குள் அறிவிக்கப்படும் - என்றார்.

## மைத்திரி அணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரியவருகின்றது.

தற்போது, கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான சாமர சம்பத் தஸநாயக்க, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்திருந்த நிலையில், சு.கவின் விசேட மத்திய குழுக் கூட்டம் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சஜித்தின் தீர்மானம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் எதிர்பார்ப்பாகும். எனவே, மக்கள் பக்கம் நின்று, அவர்களின் கோரிக்கையை ஏற்றே, நாட்டுக்காக சஜித் பிரேமதாஸா இந்தத் தியாகத்தை செய்துள்ளார்.

டலஸ் வெற்றி பெற்றதும், சஜித் பிரேமதாசஸ பிரதமராவார். இதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. - என்றார்.

## சிறுபான்மையினரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிடித்து ஆர்ப்பாட்டம் செய்த போது எடுக்கப்பட்ட படம் இது.

தேசிய ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக மேற்படி இரு வர்ணக் கோடுகளும் தேசியக் கொடியில் சேர்க்கப்பட்டு அர்த்தப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் நல்லாட்சி அரசின் காலத்தில் ஒரு விசாரணைக்காக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அழைக்கப்பட்டபோது அதை ஆட்சேபித்து, முன்னின்று, தேசிய கொடியை சிங்கள கொடியாக மாற்றி, அதனைத் தாங்கி ஆர்ப்பாட்டம் செய்தவர் டலஸ் அழகப்பெரும.

இப்படி தேசியக் கொடியைச் சிதைத்து, அதனை பயன்படுத்துவது சட்டப்படி கிரிமினல் குற்றமாகும். மேற்படி ஆணைக்குழு முன் ஆர்ப்பாட்டம் செய்வது நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட போதும், அதை மீறி, அங்கு ஒன்று கூடி தவறான தேசியக் கொடியை - சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒதுக்கி - வேண்டுமே என்று பிடித்தவரைத்தான் கூட்டமைப்பில் ஒரு பகுதியினர் நாளைய தேர்தலில் ஆதரிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

## ஜனாதிபதித் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கை இன்று காலை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது.

இதன்போது மூன்று பேரின் பெயர்கள் ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினரான டலஸ் அழகப்பெருமவின் பெயர் முன்மொழியப்பட்டது. இதனை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரான ஜி.எல். பீரிஸ் வழிமொழிந்தார்.

பதில் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை சபை முதல்வர் தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார். இதனை மனுஷ நாணயக்கார வழிமொழிந்தார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரை அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் முன்மொழிந்தார். அதனை அந்தக் கட்சியின் உறுப்பினர் ஹரினி அமரசூரிய வழிமொழிந்தார்.

இதன்படி நாளை இவர்களில் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

## மேலும் ஏழு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து 116 இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம், நாவற்குழியைச் சேர்ந்த மேரி அகஷ்டா (வயது44), அவரது இரண்டு பிள்ளைகள், மேலும் திருகோணமலை, ஆனந்தபுரியைச் சேர்ந்த மகேசன் (வயது 39), அவரது மனைவி தேவி (வயது 38), அவர்களது இரண்டு பிள்ளைகள் என மொத்தமாக 7 பேர் இலங்கையிலிருந்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அருகே உள்ள ஐந்தாம் மணல் தீடைப் பகுதியில் இன்று காலை இறங்கினர்.

தகவல் அறிந்து மண்டபம் கடலோர காவல் படையானர் ஐந்தாம் மணல் தீடையிலிருந்த இலங்கைத் தமிழர்களை , ஹோவர் கிராப்ட் படகு மூலம் மீட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்கு கொண்டு சென்று இராமேஸ்வரம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைக்குப் பின்னர் 7 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்வருடம் மார்ச் மாதத்திலிருந்து இலங்கையிலிருந்து தமிழகத்துக்குச் சென்ற அகதிகளின் எண்ணிக்கை 123 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நம்மவராய்ப் பணியாற்றுக!

இலங்கையின் அரசியலை – குறிப்பாகத் தமிழர் தரப்பின் அரசியல் போக்கை – பார்த்து நொந்து கொள்வதைத் தவிர தமிழருக்கு வேறு வழி இல்லை.

ராஜபக்ஷக்களுக்கு பொறுத்த சமயத்தில் முதுகு கொடுத்த ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவே கூடாது என்று நீதியரசர் போல தீர்ப்பளித்து, ஒரு தலைவர் தமிழ்த் தேசியப் பரப்பை வழிநடத்த தலையால் கிடங்கு வெட்டுகின்றார்.

ரணிலாவது ராஜபக்ஷக்களின் கடைசி இரண்டு மாத காலத்தில்தான் முண்டு கொடுத்தார் என்று குற்றச்சாட்டு. ஆனால் அவருக்கு மாற்றாக அவர்கள் முன்னிறுத்தும் டலஸ் அழகப்பெரும 17 வருடங்களாக ராஜபக்ஷக்களுக்கு முண்டு கொடுத்தவர். இதுவரைக்கு ராஜபக்ஷக்களுக்கு எதிராக ஒரு பகிரங்க அறிவிப்பைக் கூட விடுக்காதவர்.

அது மட்டுமல்ல, தமிழரை இராணுவ ரீதியில் அழித்தொழிக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு கட்டளை இடும் அதிகாரத்தில் ரணில் என்றும் இருந்தவரே அல்லர். மாறாக, தமிழர்களை அழித்தொழிக்கும் தந்திரோபாயங்கள் அலரி மாளிகையில் வகுக்கப்பட்ட போது, அந்தக் 'கிச்சன் கபினட்'டின் உள்வீட்டுப் பங்குதாரர் அழகப்பெரும. மேலும், தமிழருக்கு நியாயம் கிடைக்கும் முயற்சியாக ஜெனிவாவில் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எல்லாம் முட்டுக்கட்டை போடும் வியூகங்கள் மஹிந்த காலத்தில் அலரி மாளிகையிலும் பின்னர் கோட்டா காலத்தில் ஜனாதிபதி செயலகத்திலும் கட்டவிழந்த போதும் அங்கு பிரதான பங்களித்தவர்கள் இந்த டலஸ் அழகப்பெரும – பேராசிரியர் பீரிஸ் கூட்டுத்தான். ஆனால் அதற்கு மாறாக, ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக சர்வதேசம் கொண்டு வந்த பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி சேர்ந்து ஓட இணங்கியவர் ரணில்.

இதற்கிடையில் ரணிலைப் பார்த்து சுமந்திரனும் ஏனையோரும் போற்றும் காலிமுகத் திடல் போராளிகள் 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்று கூறிய மாதிரி' கருத்து வெளியிடுகின்றமை நகைப்புக்கிடமானது.

மாவட்ட ரீதியில் ஐ.தே. கட்சிக்கு ஆசனம் கிடைக்காவிட்டாலும் தேசிய ரீதியில் இரண்டரை லட்சம் வாக்குகள் அக்கட்சி பெற்றது. அதற்கான முதல் உரிமை கட்சித் தலைவர் என்ற முறையில் ரணிலுக்கு உரியது என்பதை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. அந்த வாக்குகளின் பிரதிநிதித்துவத்தில்தான் மாவட்ட ரீதியில் தோற்றாலும் ரணில் நாடாளுமன்றுக்கு வந்திருக்கின்றார். ஆனால் ரணிலுக்கு மக்கள் ஆணை இல்லை என்று கூறி இலங்கை அரசியலுக்கு நிபந்தனை விதிக்கும் சவாலை விடுக்கின்ற முன்னிலை சோசலிஸ்ட் கட்சிக்கும் அதன் தலைவர் குமார் குணரட்ணம் அணிக்கும் கடந்த தேர்தலில் விழுந்த வாக்குகள் ஆக மொத்தம் 14,500தான். அவர்களின் இப்போதைய போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு கிட்டியது என்பது அவர்களுக்கும் அவர்கள் கொள்கைக்குமான ஆதரவு அல்ல, ராஜபக்ஷக்களுக்கு எதிரான எதிர்ப்புணர்வு மட்டுமே. அந்த ஆதரவை வைத்துக்கொண்டு, இலங்கை அரசியலை அக்குழுவினர் வல்வந்தமாக தம்மிஷ்டப்படி வழிநடத்த முயல்வதும், அதற்கு சுமந்திரன், சாணக்கியன் போன்றோர் துணை போவதும் ஜனநாயகப் பேரழிவுக்கே வழி செய்யும்.

'கோட்டா கோ கம' போராட்டத்தில் தமிழர்கள் பங்குபற்றவில்லை. அதற்கு ஆசீர்வாதமும் வாழ்த்தும் கூறியதோடு அடங்கி விட்டார்கள். அது சுமந்திரனுக்கும் தெரியும். அவர்களின் (கோட்டா கோ கமவினரின்) கருத்தியலையோ, கோட்பாட்டையோ சுமந்து சொல்ல வேண்டிய கடப்பாடு நமது யாழ் மாவட்ட எம்.பி. சுமந்திரனுக்கோ, மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாணக்கியனுக்கோ கிடையாது. தமிழ் மக்களுக்கு – தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு – என்ன தேவை, அவர்களின் விருப்பம் யாது என்று அவர்களின் கண்ணாடியூடு – 'கோட்டா கோ கம' தரப்பினரின் கண்ணாடியூடு அல்ல – பார்த்துச் செயற்பட வேண்டும். அதுதான் சரி.

## பொருளாதார வங்குரோத்து நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என பொய் கூற முடியாது

### சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



நாடு எதிர்நோக்கும் பொருளாதார வங்குரோத்து நிலையில் மக்களுக்கு திடீரென நிவாரணம் வழங்கப்படும் என பொய் கூற முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரஜைகள் போராட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) காலை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதனையடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் –

குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

இடைக்கால அரசாங்கங்களுக்கு செயற்பாட்டாளர்கள் திகதிகளை நிர்ணயித்திருந்தாலும் அந்தக் காலத்துக்குள் இலக்குகளை அடைய முடியாவிட்டால் அந்த அரசாங்கமும் தோல்வி அடையும்.

இந்தக் கொள்கையில் எங்களுக்கு பெரிய பிரச்சினை இல்லை. மேலும் இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நாடு பொருளாதார திவால் நிலையில் இருக்கும் நேரத்தில் மக்களுக்கு ஒரே நேரத்தில் நிவாரணம் கிடைக்கும் என என்னால் பொய் சொல்ல முடியாது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளான எரிவாயு, எண்ணெய், உரம், பால் பவுடர், அத்தியாவசிய உணவுகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறோம்.

உண்மையில் நாடு முழுவதும் திவாலாகி விட்டது. இன்று நாடு நிதி ரீதியாக பூச்சியத்திற்கு கீழே உள்ளது. அதுதான் உண்மைக் கதை.

எனவே இவற்றை முறையாகச் செய்ய வேண்டும். அது நானோ நாமோ எடுத்த முடிவுகளால் அல்ல.

நீதியை அடைவதற்கு மக்களுக்கு நிதி பலம் வேண்டும். இந்த நாட்டில் மனிதாபிமான பொருளாதார நிர்வாகமும் நடக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக உடன்படுகிறேன். சமநிலையான பொருளாதார நிர்வாகத்தை எதிர்பார்க்கிறோம்.

இது மிகவும் குழப்பமான சூழ்நிலை. ஆனால் இதை சிரமத்துடன் நிர்வகிக்கும் திறன் எங்களிடம் உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவ பிரிட்டன் நடவடிக்கை எடுக்கவில்லை

### அந்நாட்டு ஓய்வுபெற்ற இராஜதந்திரி பீட்டர் ஹீப் சுட்டிக்காட்டு



இலங்கைக்கு சர்வதேச சமூகம் உதவி வழங்கும் நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் தலைமை தாங்கவேண்டும் என பிரிட்டனின் ஓய்வுபெற்ற இராஜதந்திரி பீட்டர் ஹீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கார்டியனில் வெளியிட்டுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடிக்கான பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதில் நடவடிக்கை வெட்கக்கேடானவை மக்கள் பட்டினியால் அவதியுறுகின்றனர். மருந்துகள் இன்மையால் உயிரிழக்கின்றனர். போதியளவு பெற்றோல் இல்லாததால் அவர்கள் வேலைக்கு செல்லவே முடியாத நிலையில் உள்ளனர் மின்சார தட்டுப்பாடு காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் எவ்வாறு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பதற்கு அப்பால் (ராஜபக்ஷக்களின் மோசமான ஆட்சி, 30 வருட கிளர்ச்சியால் நாடு சிதைவடைந்ததன் பாரம்பரியம்) நெருக்கடி நிலையில் உள்ள இன்னொரு பொதுநலவாய நாட்டுக்கு உதவும் விடயத்துக்கு பிரிட்டன் தலைமை வகிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நாங்கள் அவர்களின் விருப்பமின்றி அவர்களை 150 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்தோம் என்பதை கருத்தில்கொள்ளவில்லை, அதற்காக நாங்கள் ஏதாவது கைம்மாறு செய்யவேண்டும்). நாங்கள் மிக வேகமாக சர்வதேச நிவாரணமுயற்சியொன்றிற்கு தலைமை தாங்கவேண்டும், பொது நலவாயத்தின் ஊடாக அதனைச் செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கும் டக்ளஸுக்கும் இடையில் நடந்தது சந்திப்பு!

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள சில முஸ்லிம் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தொடர்பாக மெத்தனமான கொள்கையை கடைப்பிடிக்குமாறு பதில் ஜனாதிபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

தடை செய்யப்பட்டுள்ள சில அமைப்புக்கள் இலங்கைக்கு முதலீடுகளைக் கொண்டு வந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக செயற்பட்ட தயாராக உள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாகிஸ்தான் இடைத்தேர்தலில் இம்ரான் கட்சி அமோக வெற்றி



பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாண இடைத் தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான் அரசியலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது பஞ்சாப் மாகாணம். ஆளும் முஸ்லிம் லீக் நவாப் கட்சியின் கோட்டையான இங்கு 20 தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. இதன் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

இதில் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் 15 இடங்கள், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (பி.எம்.எல்.) நவாஸ் கட்சி 4 இடங்கள், சுயேச்சை ஒரு இடத்திலும் வெற்றி பெற்றதாக கூறப்படுகிறது. ஆளும் பி.எம்.எல். நவாப் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளதால், தற்போது முதல்வராக இருக்கும் பிரதமர் பொஸ் ஷெரிப்பின் மகன் ஹம்சா ஷெரிப் பதவி இழக்க நேரிடும். இது பி.எம்.எல். நவாப் கட்சிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. விரைவில் பஞ்சாப் மாகாண சட்டப் பேரவை தேர்தல் நடக்க உள்ள நிலையில் இந்த தேர்தல் முடிவால் பிரதமர் பொஸ் அதிர்ச்சி அடைந்துள்ளார். இந்நிலையில், இம்ரான் கான் தனது டுவிட்டர் பதிவு மூலமாக, விரைவில் நாடாளுமன்ற தேர்தலை நடத்த வேண்டுமென தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தி உள்ளார்.

## ஏலத்திற்கு வருகின்றது ஹிட்லரின் கைக்கடிகாரம்



அடால்ப் ஹிட்லருக்கு சொந்தமானது என்று கூறப்படும் கைக்கடிகாரம் ஏலத்திற்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த தங்க ஆண்ட்ரியாஸ் ஹூபர் ரிவர்சிபிள் கைக்கடிகாரம் சுமார் 2-4 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விலை போகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது இந்திய மதிப்பில் சுமார் 31 கோடி ரூபாவாகும்.

அந்த கைக்கடிகாரத்தில் மூன்று திகதிகள் உள்ளன. ஹிட்லருடைய பிறந்தநாள், அவர் ஜேர்மன் நாட்டின் அதிபராக நியமனம் செய்யப்பட்ட நாள், 1933 ஆம் வருடத்தில் நாசிப்படை தேர்தலில் வென்ற நாள். ஹிட்லரின் இந்த கைக்கடிகாரத்தை அலெக்சாண்டர் ஹிஸ்டோரிகல் என்ற நிறுவனம் ஏலம் விடுகிறது. கைக்கடிகார தயாரிப்பாளர்களும் ராணுவ வரலாற்று ஆசிரியர்களும் அந்த கடிகாரத்தின் பின்னணியை ஆராய்ந்து அது ஹிட்லர் தான் வைத்து இருந்தார் என உறுதிப்படுத்தியுள்ளனர். இருப்பினும் அந்த கடிகார தயாரிப்பு நிறுவனம் இந்த கடிகாரத்தின் சட்டபூர்வமான தன்மையை அங்கீகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

## பெண் ஊழியர்களுக்கு பதிலாக இனி பணியில் ஆண் ஊழியர்கள்?



ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினர். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதில் இருந்து பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்து வருகின்றனர். பெண்கள் மேல் நிலைக் கல்வி பயில தடை, பெண்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கக் கூடாது, பெண்செய்திவாசிப்பாளர்கள்தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் போது தங்கள் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும் என அங்கு ஏற்கனவே பல கடுமையான உத்தரவுகளை தலிபான்கள் பிறப்பித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் உள்ள பெண் ஊழியர்கள் தங்களுக்கு பதில் அந்த வேலையைச் செய்ய அவர்களின் ஆண் உறவினரை அனுப்புமாறு தலிபான்கள் கேட்டு கொண்டுள்ளனர் என ஆங்கில செய்தி நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து அங்குள்ள பெண் அரசாங்க ஊழியர் ஒருவருக்கு தலிபான் அதிகாரிகளிடமிருந்து அழைப்பு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்துள்ளதால் பெண்களுக்கு பதிலாக ஆண்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என தலிபான்கள் தெரிவித்தனர் என நிதித்துறையில் பணிபுரியும் அந்த பெண் தெரிவித்துள்ளார். 15 ஆண்டுகளாக தான் பணியாற்றிய ஒரு பதவிக்கு மாற்றாக ஒரு ஆண் நபரை பரிந்துரைக்கும்படி அந்த நாட்டின் மனித வளத்துறையிலிருந்து தனக்கு அழைப்பு வந்ததாக அந்தப் பெண் கூறியுள்ளார்.



## போர் காரணமாக உக்ரைனில் இதுவரை 5,110 பேர் உயிரிழப்பு

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு 150வது நாளை நெருங்கி வருகிறது. இந்த போர் உலக அளவில் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த போரினால் இதுவரை ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.


ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை அளித்து ஆதரவு தெரிவித்து வருகின்றன. உக்ரைனுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகளை மேற்கத்திய நாடுகள் விதித்துள்ளன. இந்நிலையில், போர் தொடங்கியதில் இருந்து உக்ரைனில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 5,110 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 6,752 பேர் காயம் அடைந்துள்ளனர். உக்ரைன் மீது இரவு, பகல் பாராமல் ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு கூறி உள்ளது.

## பாகிஸ்தானில் கவிழ்ந்தது படகு 19 பெண்கள் பரிதாபகரமாக சாவு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் ரஹிம் யார் கான் மாவட்டம் மோட்ச்கா பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் ராஜன்பூர் பகுதியில் நடந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு படகில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். பஞ்சாப் மற்றும் சிந்து மாகாண எல்லையில் உள்ள இண்டஸ் ஆற்றில் பயணித்தபோது அந்தப் படகு எதிர்பாராத விதமாக ஆற்றில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் ஆற்று நீரில் அடித்துச்செல்லப்பட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக்குழுவினர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில், இந்த படகு விபத்தில் 19 பெண்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் ஆற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ள பலரை தேடும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதனால் பலி எண்ணிக்கை உயரும் என்ற அச்சம் எழுந்துள்ளது. விசாரணையில், அதிக அளவிலான மக்களை படகில் ஏற்றியது, நீரின் ஓட்டம் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என தகவல் வெளியானது. திருமண வீட்டிற்கு சென்று திரும்பியவர்கள் ஆற்றில் மூழ்கி பலியான இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.








# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி தினம் இன்று

**– விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா –**
**(முன்னாள் தலைவர், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம், காரைதீவு)**

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 75 ஆவது ஆண்டு மகாசமாதி தினம் (19.07.2022-செவ்வாய்க்கிழமை) இன்றாகும். அடிகளார் 1892.03.27ஆம் திகதி இந்த அவனியில் அவதரித்து 1947.07.19 ஆம் திகதி மகா சமாதி அடைந்தார். இன்றுடன் 75 வருடங்களாகின்றன. அதாவது அடிகளார் அவதரித்து 130 வருடங்களாகின்றன. மகாசமாதியடைந்து 75 வருடங்களாகின்றன. ஆக வாழ்ந்த காலம் 55 வருடங்கள்.

இந்த 75ஆவது ஆண்டு பவளவிழா அனுஷ்டிப்புத் தொடர் இன்றுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 2023.07.19 வரை தொடரவிருக்கின்றது.

அடிகளாரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி நினைவு நிகழ்வுத் தொடர் இன்று அவர் பிறந்த காரைதீவில் அவரது திருவுருவச்சிலை திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

காரைதீவில் அவர் பிறந்த இல்லத்தோடு ஒட்டியதாக அவர் நினைவாக எழுப்பப்பட்ட மணி மண்டபத்தை நிருமாணித்த பணிமன்றத்தினர் இந்து கலாசார திணைக்களப்பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் அவர்களின் அனுசரணையோடு காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய பிரதான வீதி சந்திக்கும் முச்சந்தியில் நிறுவிய மார்பளவிலான திருவுருவச்சிலை இன்று இ.கி.மினின் மட்டு. மாநில உதவிமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ அவர்களால் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இது தவிர, இந்த 75ஆவது ஆண்டு காலப்பகுதியில் தமிழ்கூறுநல்லுலகெங்கும் பல சிலைகள் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பரோபகாரி உதயசூரியன் நாகமணி குணரெத்தினம் அவர்கள் காரைதீவில் நிறுவுவதற்கென இருபெரும் சிலைகளை தனது சொந்தச் செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

அவர் மகாசமாதி அடைந்த ஜூலை 19 தினத்தை கௌரவிக்குமுகமாக இலங்கை அரசாங்கம் அகில இலங்கை தமிழ் மொழித்தினபோட்டிகளின் இறுதி நாள் விழாவை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள மகா சமாதி கல்லறையில் அவர் யாத்த பாடல் இன்றும் மிளிர்ந்துகொண்டிருக்கிறது.

இன்றைய நன்நாளில் அப்பாடலின் விளக்கத்தை இன்றைய சந்ததிக்கு எடுத்தியம்புதல் பொருத்தமாகும்.

'வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'

வள்ளலாம் இறைவன் திருவடிக்கு ஏற்ற மலரெது? வெள்ளை நிற மல்லிகையா? வேறெந்த பெரிய மலரா? உத்தமனாம் இறைவன் திருவடிக்கு வேண்டிய மலர் வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை. உள்ளமாம் தாமரையே அவன் வேண்டுவது.



'காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காபவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது'

மலர்ந்த தாமரையா? கழுநீர்ப்பூ மாலையா? பெரியவனாம் இறைவனுக்கு ஏற்ற மலரெது? மலர்ந்த மலருமில்லை. கழுநீர்ப்பூ மாலையும் இல்லை. அன்பினால் வணங்கும் கூப்பிய கைகளாம் காந்தள் மலரே அரசனாம் இறைவன் வேண்டுவது.

'பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவற்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.'

பாடிக் கொண்டு வரும் வண்டுகள் விரும்பும் பொன்னிறக் கொன்றை மலரா? உலகத்தில் இல்லாமல் தேவர் உலகில் இருக்கும் கற்பக மலரா? வேண்டுதல் வேண்டாமை இல்லாததால் எந்த வித வருத்தமும் இல்லாத இறைவனுக்கு ஏற்ற மலரெது? பாடும் வண்டுகள் விரும்பும் கொன்றையில்லை. பாரில் இல்லாத பூவுமில்லை. அவன் அருளை எண்ணிக் கண்ணீர் விடும் விழியெனும் நெய்தல் பூ தான் தலைவனாம் இறைவன் வேண்டுவது.

**அளப்பரிய பணிகள்**

அடிகளார் ஆற்றிய அளப்பரிய பணிகளை இன்றும் தமிழ்கூறு நல்லுலகம் நினைவில் கொண்டிருக்கிறது.

இயல்,இசை,நாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபுலாநந்தர்.

அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர். சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்வனவாகும்.

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற 'யாழ்நூல்' என்னும் பொக்கிஷத்தைத் தரணிக்குத் தந்த சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையின் காரைதீவில் 1892-03-27 அன்று சாமித்தம்பி - கண்ணம்மை தம்பதியருக்கு மகனாக 'தம்பிப்பிள்ளை' என்ற நாமத்தோடு அவதரித்தார். சிறுவயதில் நோய்வாய்ப்படவே கதிர்காம முருகனின் பெயராகிய 'மயில்வாகனன்' எனும் பெயரை பெற்றோர் சூட்டினர்.

பாரதியாரின் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அன்று பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார்கள். இத்தனை பேருக்கும் எதிராக பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே உலவ விட்டவர் விபுலானந்த அடிகளார் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

இன்று பாரதியாரைப் பற்றி ஆயிரக்கணக்கான நூல்கள் வந்து விட்டன. லட்சக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டு விட்டன.

விபுலானந்தர் தமிழ்நாட்டில் கால் ஊன்றாமல் இருந்திருந்தால் மகாகவி பாரதியாரை உலகம் காணாது இருந்திருக்கும். பாரதியின் தமிழ் வீணாக மடிந்திருக்கும். சுவாமி விபுலானந்தர் பல்கலைக் கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டு சென்றமையால் பாரதியின் திறமையை யாராலும் அழிக்க முடியவில்லை. விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும்.

சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப் படுகின்ற 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் அடிகளாரின் கவிதை மலரும், மற்றைய இனிமையான கவிதைகளும் (7ஆம் பக்கம் பார்க்க..)





# தேங்கிய குப்பைகள், தூர்வாரப்படாத வடிகான்களினால் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கும் கல்முனை மாநகர்

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை மாநகர பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஒழுங்கான திண்மக் கழிவகற்றல் இடம்பெறாமை காரணமாக திண்மக்கழிவுகள் அரச மற்றும் தனியார் காரியாலயங்களுக்கு அருகிலும், பாடசாலைகளுக்கு அருகிலும், சந்திகளிலும், நீர்நிலைகள், மைதானங்கள், கடற்கரை ஓரங்கள் போன்ற பிரதேசங்களில் மக்கள் குவித்து வருகின்றனர். இதனால் இரவில் கட்டாக்காலி மாடுகளும், தெருநாய்களும் குப்பைகளை கிளறி விடுவதனால் பல இடங்களிலும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அது மாத்திரமன்றி டெங்கு பரவும் இடங்கள் பல இந்த குப்பை கொட்டப்பட்டுள்ள இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன. வடிகான்கள் கூட மண் நிரம்பி நீர் வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. சில கான் மூடிகள் நீண்டகாலமாக உடைந்து காணப்படுகின்றன. இதனால் வீதிப் போக்குவரத்தும் சில நேரங்களில் தடைப்படுவதாக மக்கள் விசனம் வெளியிடுகின்றனர். ஒழுங்கான திட்டமிடல்களோ, சரியான திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவமோ இல்லாதமையினால் இந்த நிலை உருவாகியுள்ளது.

மேலும் இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் கல்முனை மாநகர சபைக்கு அறிவித்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்த விடயங்களுக்கு பொறுப்பான கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்த் காரியப்பரை தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது பற்றி கேட்ட போது அவர் கூறிய விளக்கம் வருமாறு:-

"இந்தப் பிரச்சினையை நானும் என் கண்களினால் காண்கிறேன். இந்த விடயம் மாநகர சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாரிய இழுக்கு. வடிகான் தூர்வாருதல் போன்றவை பொதுவசதிகள் பிரிவின் கீழ் வருவதனால் அப்பணி ஆணையாளர், பிரதி ஆணையாளர் வசமே உள்ளன. குறைபாடுகளை தீர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கே உள்ளது.

"எங்களின் சுகாதரப் பிரிவு கடந்த காலங்களில் குறைந்தளவு வளங்களை கொண்டு நிறைவான சேவையை வழங்கி வந்தது. ஆனால் தற்போது சுகாதரப் பிரிவுக்கான வாகனங்கள் ஆணையாளர் கட்டுப்பாட்டில் இருப்பதனால் திண்மக் கழிவகற்றலை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் சுகாதாரப் பிரிவின் சேவைகள் முடங்கி மந்தகதியிலையே இயங்குகின்றன" - என்றார்.

இவ்விடயம் தொடர்பில் கல்முனை மாநகர சபை வட்டாரத்தில் கேட்ட போது முதல்வர், ஆணையாளர் ஆகியோரே இந்த நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள், அவர்களே இவற்றெல்லாம் முடக்கி வைத்துள்ளனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. கல்முனை மாநகர உயர் அதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்பும், ஊழலற்ற நிறைவான வளப்பங்கீடும் இருந்தால் இந்த பிரச்சினைகளை அர்ப்பணிப்பு மிக்க மாநகர சுகாதாரப்பிரிவின் ஊழியர் படையணியை கொண்டு முழுமையாக தீர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

## களுவாஞ்சிக்குடியில் விபத்து முதியவர் சம்பவ இடத்தில் பலி

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் பலியானார் எனக் களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி, சக்தி இல்ல வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை செல்லத்துரை என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தேவாலயத்திற்கு வழிபாட்டுக்காகச் சென்று கொண்டிருக்கும் போது அந்த வீதியூடாக கல்முனை இருந்து மட்டக்களப்பை நோக்கிப் பயணித்த பஸ் மோதியதில் இந்நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற களுவாஞ்சிக்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உலர் உணவுப் பொதிகள் தம்பலகாமத்தில் வழங்கல்




(ஹஸ்பர்)

மனிதாபிமான உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு சர்வோதயம் நிறுவனத்துடன் இணைந்து ஹேமாஸ் மற்றும் டயலொக் ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவை உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இன்று வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இந்த உலர் உணவுப் பொதிகள், பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட - தெரிவு செய்யப்பட்ட - பயனாளிகளுக்காகவழங்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்கு மொத்தமாக 600 உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் இதனை உரிய பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். பொற்கேணி, புதுக்குடியிருப்பு, மீரா நகர் உட்பட்ட கிராம சேவகர் பிரிவுக்கும் வழங்கப்பட்டன.

இதில் சர்வோதய நிறுவன ஊழியர்கள், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் கருணாகரன் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## நாவற்குடா சந்தையருகில் நேற்று சடலம் ஒன்று மீட்பு



மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பொதுச் சந்தைக்கு அருகில் நேற்று சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.றஹீம் தெரிவித்தார்.

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில், நாவற்குடா இந்து கலாசார நிலையத்துக்கு முன்னால் பொதுச் சந்தைக்கு அருகில் மீட்கப்பட்ட இந்த ஆணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவில் அரிசிப் பொதிகள் 140 குடும்பங்களுக்கு வழங்கல்

காரைதீவு 12 ஆம் பிரிவில் சமகால பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட 140 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி விநியோகம் செய்யப்பட்டது.

பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த - காரைதீவைச் சேர்ந்த - அகிலன் சுஜீவா தம்பதியினர் 140 குடும்பங்களுக்குமான 140 அரிசி பொதிகளை கையளித்தார்கள்.

இதன் போது, காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜனும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.




காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி தினம் இன்று





(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றியபணியினைஇயம்பிக்கொண்டிருக்கின்றன.

சுவாமி விபுலானந்த அடிகள் மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.

ஆங்கிலக் கல்வியினை இவர் முதலில் கல்முனையிலுள்ள மெதடிஸ்த கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பிலுள்ள மைக்கேல் கல்லூரியிலும் கற்றார். இவர் 16 ஆவது வயதிலேயே கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியெய்தினார். 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று 'இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்' என்னும் பெருமையையும் பெற்றார். 1919இல் லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.ஸி. தேர்விலும் சித்தியடைந்தார்.

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளரும் திருப்புகழ் சிவப்பிரகாசம்,சிவஞான சித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் 1928இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

### பிரபோத சைதன்யர்

மயில்வாகனனுக்கு சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சித்தானந்தரினால் பிரபோத சைதன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. 1924இல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து 'பிரபோத சைதன்யர்' என்னும் பெயர் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு சுவாமி சிவானந்தரால் 'சுவாமி விபுலானந்தர்' என்னும் நாமம் சூட்டப் பெற்றார். கல்லடி உப்போடையில் விபுலானந்தர் தாம் அமைத்த பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது தமது குருவின் ஞாபகார்த்தமாகவே.

'கலை அறிவியல் மெய்ஞானம் மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே முழுமையான கல்வி' என்பது அடிகளாரின் கருத்தாகும்.

1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்தா வித்தியாலயமும் காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர்,மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பெரிய கல்வித் தொண்டு செய்தார்.

பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக் கல்லூரியையும் இராமகிருஷ்ண சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார். மேலும் இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை



ஒருங்கமைத்தார்.

1931இல்அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும, 1943இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார். அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் கலைஞராக, ஆத்மீக ஞானியாக, ஆற்றல் மிகு பேராசிரியராக, இயற்றமிழ் வல்லுனராக, இசைத்தமிழ் ஆராய்ச்சியாளராக பல பணிகள் புரிந்தார்.

1943ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ் ஆய்வுத் துறையில் எவ்வழியில் செல்ல வேண்டுமென்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.

யாழ்நூல், மதங்கசூளாமணி, கணேச தோத்திரப் பஞ்சகம், குமர வேணவ மணிமாலை, நடராஜ வடிவம் என்பன அடிகளாரின் பிரதான நூல்களாகக் காணப்படுகின்றன. மேலும் இலக்கியம், இசை,சமயம், மொழியியல், கல்வி, அறிவியல் சம்பந்தமாக எண்ணிறைந்த கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டு தமிழுக்கும் கல்விக்கும் தொண்டாற்றியுள்ளார். மேலும் விவேகானந்த ஞானதீபம், சம்பாசனைகள் (1924), கருமயோகம் (1934), ஞான யோகம் (1934), நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை (1941), விவேகானந்தரின் பிரசங்கம் (1934), அறிவியல் சம்பந்தமான எந்திரவியல் (1933), கலைச்சொல்லாக்க மாநாட்டுத் தலைமையுரை (1936), கலைச் சொற்கள் வேதிநூல் (1938), மின்சார சாத்தி வரலாறு,விஞ்ஞான தீபம் (1922), விஞ்ஞான தீபம் – மொழிபெயர்ப்பு முறை (1922) போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்குமட்டுமல்ல இலங்கைத்தமிழருக்கும் பெருமை தேடித் தந்தது.

அப்படி ஈழம் முதல் பணி இமயம் வரை கொடி கட்டிய இசைத்தமிழனான அடிகளாரின் 75 ஆவது மகாசமாதி நினைவு ஆண்டுத்தொடர் உலகின் எட்டுத்திக்கிலும் புகழ்பரப்ப பரவலாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது வேணவா.

# உரிமை சார்ந்த விடயங்களையும் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் தமிழ் தேசிய கட்சிகள் ஈடுபடவேண்டும்

## முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் சுட்டிக்காட்டு



தமிழ் மக்களின் இருப்பையும் உரிமை சார்ந்த விடயங்களையும் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஈடுபடவேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் புதிய ஜனாதிபதி தேர்வு தொடர்பாக அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்கின்ற சந்தர்ப்பம் தற்போது வந்திருக்கின்றது. இந்த நாட்டில் அராஜகங்களை மேற்கொண்ட பொருளாதார ரீதியாகவும் சீரழித்த மற்றும் எமது சிறுபான்மை இனத்தின் இருப்பை அழிப்பதற்காகவும் மத ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்தும் எமது இனத்தின் அடையாளத்தை அழிப்பதற்காக வந்த மிக மோசமான ஒரு ஜனாதிபதி சிங்களத் தமிழ் முஸ்லிம் என அனைத்து மக்களாலும் துரத்தியடிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த நாட்டில் புதிய ஒரு ஜனாதிபதி அனைத்து நாடாளுமன்றப் பிரதிநிதிகளாலும் தெரிவு செய்யப்படவிருக்கின்றார். வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பி. தலைவர் அனுர குமார திசாநாயக்க போன்றவர்கள் களமிறக்கப்பட உள்ளனர்.

இந்நிலையில் தமிழ் பரப்பில் இருக்கின்ற தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்ட கட்சிகள் அத்தோடு தமிழர் நலன் சார்ந்து செயற்படுகின்ற தமிழ்த் தேசிய பரப்பிற்கு அப்பால் இருக்கின்ற மலையக கட்சிகள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பது முக்கியமானதொன்றாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகள் தெரிவு செய்யப்படவுள்ள ஜனாதிபதி அல்லது தெரிவு செய்யப்படவிருக்கின்ற வேட்பாளர்களிடம் என்ன கோரிக்கைகளை முன்வைக்க போகின்றார்கள் என்கின்ற விடயம் முக்கியமானதொன்றாக இருக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு அதிகளவான பிரச்சினை காணப்படுகின்றது.

புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை மட்டுமல்லாமல் ஏனைய இறைமை சார்ந்த பிரச்சினைகள், எங்கள் இனம் சார்ந்த பிரச்சினைகள் கூடுதலாகக் காணப்படுகின்றன. விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற தமிழர்களின் நலன் சார்ந்த விடயங்கள் கொடுக்கப்படுகின்ற கோரிக்கையில் உள்ளடக்கப்படவேண்டிய முக்கியமான ஒன்றாகியுள்ளது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமானது அம்பாறை மாவட்டமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் இருப்பு என்பது தற்போது கேள்விக்குறியாக மாறியுள்ளது. அவர்களின் உரிமை சார்ந்த விடயங்கள், இனம் சார்ந்த விடயங்கள், மதம் சார்ந்த விடயங்கள், இருப்பு சார்ந்த விடயங்கள் என்பன தற்போது கேள்விக்குறியாகி கவலைக்கிடமாகியுள்ளன.

இந்த வகையில் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனோடு தமிழ்த் தேசிய கட்சியான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி என்பன கூடுதலான கவனத்தை செலுத்த வேண்டி இருக்கின்றது.

அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது முதலாவது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் செயலகத்துக்கான நிதி மற்றும் காணி அதிகாரம் என்பன கொடுக்கப்படாமல் தற்போதும் கூட மறுக்கப்பட்டு காணப்படுகின்றது. அதனடிப்படையில் அம்பாறை மாவட்ட மக்களின் முதலாவது கோரிக்கையாக வடக்கு பிரதேச செயலகத்தின் காணி நிதி அதிகாரங்கள் என்பன கொடுக்கப்பட வேண்டும். இரண்டாவது தொல்லியல் மற்றும் வன இலாக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விடயங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் தொல்லியல் என்ற போர்வையில் விகாரைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலைமைகள் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற முக்கியமான பிரச்சினைகளாகும்.

அந்த வகையில் புதிய ஜனாதிபதி வேட்பாளர்களிடையே தமிழ்த் தேசியக் கட்சிகள் இவ்வாறான விடயங்களை வேண்டுகோளாக முன்வைப்பது அவசியமாகும். இது அம்பாறை மாவட்ட அனைத்து மக்களின் முக்கிய கோரிக்கையாகக் காணப்படுகின்றது. இது தவிர அண்மையில் கூட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் வடக்கை மையப்படுத்தி கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

இதில் வடக்கை மட்டும் முக்கியமான கோரிக்கைகளாக வைக்காமல் அம்பாறை மாவட்டத்தின் இருப்பை அல்லது பாரம்பரியத்தை பாதுகாக்கிற விடயத்தை முக்கியமாக முன்வைக்க வேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். தொல்லியல் என்ற போர்வையில் அத்துமீறி பிடிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதில் விகாரைகள் அமைப்பது தடை செய்யப்பட வேண்டிய தொன்றாக இருக்கின்றது. அது மட்டுமன்றி அனைத்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் மட்டுமல்லாது மலையகக் கட்சிகள் ஆளும் கட்சியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த விடயத்தை முன்வைக்க வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கின்றீர்கள்.

தேர்தல் காலங்களில் மட்டும் இங்கு வந்து அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருவோம் என்ற போலி வார்த்தைகளைக் கூறாமல் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அம்பாறை மாவட்ட மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயம்தான் அம்பாறை மாவட்ட மக்கள் உங்கள் மீது வைக்கின்ற ஒரு விண்ணப்பமாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்கும் என்று நினைக்கின்றேன். அது போன்று ஏனைய கட்சிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.





## காலிமுகத்திடல் போராட்டகுழு பிரதிநிதிகள் ரிஷாத் உள்ளிட்ட குழுவினருடன் சந்திப்பு!

காலிமுகத்திடல் போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களை நேற்று (திங்கட்கிழமை) கட்சி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, நாளை (புதன்கிழமை ) புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வது தொடர்பில், அந்தப் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்தனர். அத்துடன், அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் தமது கருத்துக்களையும், தாம் கொண்டிருக்கும் திட்டங்களையும் வெளிப்படுத்தியதோடு, அது தொடர்பான ஆவணத்தையும் கையளித்தனர்.

தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளுடன் போராட்டக் குழுவினர் நடத்தி வரும் பேச்சுகளின் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

## விமலின் சொத்துக் குவிப்பு; வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

சட்டத்துக்கு புறம்பான வழிகளில் சொத்து சேர்த்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பத்திரிகையை மையப்படுத்திய வழக்கை, 'வழக்கு விசாரணைக்கு முன்னரான ஒன்றுகூடலுக்கு' திகதி குறித்து கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் செப்ரெம்பர் 13 ஆம் திகதிக்கு அதனை ஒத்தி வைத்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

நேற்று (திங்கட்கிழமை) இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி மேற்படி வழக்கை முன்னெடுத்து செல்ல போதுமான சான்றுகள், சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என செப்ரெம்பர் 13 ஆம் திகதி விசாரணைக்கு முன்னரான ஒன்றுகூடலில் ஆராயப்படவுள்ளது.

விமல் வீரவன்ஸ அமைச்சராக இருந்த காலப்பகுதியில், அதாவது 2009 ஜனவரி முதலாம் திகதிக்கும் 2014 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், சம்பாதிக்கப்பட்ட வழிமுறையை வெளிப்படுத்த முடியாத வகையில் சேர்க்கப்பட்ட 7 கோடியே 50 லட்சம் ரூபா பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலேயே இந்த சொத்துக் குவிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 26 குற்றச்சாட்டுக்களை விமல் மீது சுமத்தியுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக் குழு, அவற்றை நிரூபிப்பதற்காக 32 சாட்சிகள், 13 ஆவணங்கள் மற்றும் 40 தடயப் பொருள்களின் பட்டியலையும் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளது.

விமலால் சட்டத்துக்குப் புறம்பாகச் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் மேற்படி சொத்துக்களில் வீடு, வாகனங்கள் மற்றும் பணம் ஆகியன உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2022இல் வெளியிடப்பெற்றது.